# JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU

## CC No. 290/2020
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW1 |
| Name | : பிரபாகர் |
| Father's Name | : ராஜாராம் |
| Village | : பாண்டிச்சேரி |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.12.2022.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –**

இந்த வழக்கினை நான் எதிரியிடமிருந்து ரூ.16,17,500/—பெறவேண்டி தாக்கல் செய்துள்ளேன். புகாரில் குறிப்பிட்டுள்ள ரசீதுகள் அனைத்து ரூ.16,17,500/— க்கு தான். பீல்கள் மொத்தம் ரூ.16,17,500/— இருக்கும்போது நான் ரூ.12லட்சத்திற்கு ஏன் காசோலையை எதிரியிடமிருந்து பெற்றேன் என்றால் பீல்களில் குறிப்பிட்டுள்ள தொகையினை பூர்த்தி செய்தவற்காக அந்த காசோலையை பெற்றுக்கொண்டேன். பெற்ற ரூ.12லட்ச ரூபாய்கான காசோலைகளுக்கும், மேற்படி பீல்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நான் கணக்கில் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கான சிசி எண்.291/2020ல் குறிப்பிட்டுள்ள பீல்களின் தொகை ரூ.6,65,625/—ஆகும். அந்த வழக்கு சம்பந்தமாக எதிரி என்னிடம் இரண்டு காசோலைகளை ரூ.5 லட்சத்திற்காக கொடுத்தார். மேற்படி இந்த காசோலைகளுக்கும், பீல்களுக்கு உள்ள வித்தியாசத்தை நான் குறியீடு செய்துயிருக்கேன். 2020 ஆண்டு கடைசியில் பிரன்வ் ஏஜென்சி நிறுவனம் மூடிப்பட்டது. இந்த வழக்கு, மற்றும் சிசி எண். 291/2020 வழக்கு சம்பந்தமான காசோலைகளை எதிரி என்னிடம் 2020ல்

பிப்ரவரி மாதம் முதலாவது வாரத்தில் கொடுத்தார். காசோலைகளில் வெவ்வேறு தொகைகள் இருந்தன என்றும் நான் எதிரியிடம் சரியான தொகையை எழுதி தருமாறு கேட்டேன், அதற்கு அவர் எல்லாம் ஒரே கணக்கு சரிதான் என்று சொன்னார். மேற்படி காசோலைகளில் குறிப்பிட்டு நிறுவனங்களான ஜி.கே.ஓட்டல் மற்றும் G.K.Hospitalities வெவ்வேறு நிறுவனம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் கணக்கு வழக்கு அனைத்தும் வேறு துறையின் பார்த்து கொள்கிறார்கள், ஆதனால் எதிரி ரொக்கமாய் செலுத்திய தொகை எனக்கு தெரியவரவில்லை என்றால் சரியல்ல.

2. என்னுடைய சாட்சியத்தில் கல்யாணி மற்றும் கலைவாணி ஆகியோருக்கு இந்நிறுவனம் சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் சமர்பிக்கப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளேன். அவ்வாறு அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்கவேண்டும் என்றால் நிறுவனத்தில் கேட்டுதான் சமர்பிக்க முடியும். பொதுவாக எங்கள் நிறுவனத்தில் வாடிக்கையாளர்கள் நாங்கள் விற்கும் அரிசியில் பிரச்சனை இருந்தால் மாற்றிகொடுப்போம். இந்த வழக்கில் எதிரியால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பில் நான் கொடுத்த அரிசி பிரச்சனை உள்ளது என்று குறிபிட்டுள்ளார், அது சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் கொடுத்த அரிசியில் எந்த பிரச்சனையும் இல்லை அதனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2019 செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் 3 இருந்து 4 தடவை போலிசார் விசாரணை செய்தார். இந்த விசாரணை முடிந்த பிறகுதான் எதிரி என்னிடம் காசோலைகளை கொடுத்தார். காசோலைகளில் பொய்யான தொகைகளை நானே எழுதிக்கொண்டு எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் இந்த நீதிமன்றத்தின் மூலம் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரிதான்.

Sd. xxxxxx

Judicial Magistrate No.II
Chengalpattu.

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.